<u>செய்தி வெளியீடு</u>

**தமிழ்நாடு அரசின் முயற்சியால் பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு ரூபாய் 3,000 கோடிக்கும் மேல் வழங்கப்பட்டது**

பயிர் இழப்பினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற எண்ணத்தில், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவுப்படி, **பிரதம மந்திரியின் பயிர் காப்பீட்டுத் திட்டம் காரீப் 2016** முதல், சென்னை நீங்கலாக தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. **இத்திட்டத்தின்கீழ்**, தமிழகத்திலுள்ள மாவட்டங்கள் மூன்று தொகுப்புகளாக பிரிக்கப்பட்டு, **இந்திய வேளாண் காப்பீட்டுக் கழகம்** (Agriculture Insurance Company of India Limited), **நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் பொது காப்பீட்டுக் கழகம்** (New India Assurance General Insurance Company Limited) மற்றும் **ஐ.சி.ஐ.சி.ஐ லம்பார்டு பொதுக் காப்பீட்டுக் கழகம்** (ICICI Lombard General Insurance Company) ஆகிய மூன்று காப்பீட்டு நிறுவனங்கள் மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

புதிய பயிர்காப்பீட்டுத் திட்டத்தை தமிழகத்தில் தீவிரமாக செயல்படுத்த அரசு சீரிய முயற்சிகளை மேற்கொண்டது. இதன் விளைவாக தமிழ்நாடு முழுவதும், சென்னை மாவட்டம் நீங்கலாக 31 மாவட்டங்களில் பிரதம மந்திரியின் பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் 15.37 லட்சம் விவசாயிகள் சாகுபடி செய்த 31.85 லட்சம் ஏக்கர் பயிர்கள் காப்பீடு செய்யப்பட்டு, அதிக அளவில் விவசாயிகளை பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் பதிவு செய்த மாநிலங்களில் ஒன்றாக தமிழகம் விளங்குகின்றது. குறிப்பாக, இத்திட்டத்தில் பதிவு செய்த விவசாயிகளில் **78 சதவீதம் (சுமார் 12 இலட்சம் விவசாயிகள்) கடன்பெறாத விவசாயிகளை** பதிவு செய்ததில் **<u>அகில இந்திய அளவில் தமிழகம் முதலிடம் வகிக்கிறது.</u>** **மேலும்,**

**காப்பீட்டு கட்டண மானியத்தில் மாநில அரசின் பங்காக ரூ.565 கோடி நிதி, காப்பீட்டு நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டது.**

**2016–17** ஆம் ஆண்டு பாரத பிரதமரின் பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் அனைத்து பணிகளும் காலத்தே நிறைவேற்ற தமிழ்நாடு அரசு மேற்கொண்ட சீரிய முயற்சிகளால் காப்பீட்டு நிறுவனங்கள் விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய இழப்பீட்டுத் தொகை விரைந்து கணிக்கப்பட்டது. இதன் அடிப்படையில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கும் பணியினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் **24.4.2017** அன்று தொடங்கி வைத்து, பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் விரைவில் இழப்பீட்டுத் தொகை கிடைக்க நடவடிக்கை எடுக்குமாறு துறை அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார்கள்.

**2016–17** ஆம் ஆண்டில் மத்திய அரசால் சம்பா நெற்பயிரினை பதிவு செய்வதற்கு, நீட்டிக்கப்பட்ட காலத்தில் காப்பீடு செய்த விவசாயிகளுக்கான இழப்பீட்டுத் தொகையினையும், காரீப் **2016** மற்றும் ரபி **2016–17**ல் காப்பீடு செய்த விவசாயிகளுக்கான இழப்பீட்டுத் தொகையினையும் வழங்க காப்பீட்டு நிறுவனங்களை அறிவுறுத்தும்படி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களுக்கு கடிதம் எழுதியதை தொடர்ந்து இந்திய வேளாண் காப்பீட்டுக் கழகம் நீட்டிக்கப்பட்ட காலத்திற்கு ரூ. **103.15** கோடி வழங்கியுள்ளது. மேலும், நீட்டிக்கப்பட்ட காலத்திற்கு உரிய இழப்பீட்டுத்தொகையினை முழுமையாக விவசாயிகளுக்கு வழங்குமாறு மத்திய அரசின் அறிவுரைக்கிணங்க மற்ற காப்பீட்டு நிறுவனங்களான **நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் பொது காப்பீட்டுக் கழகம் (**New India Assurance General Insurance Company Limited) மற்றும் **ஐ.சி.ஐ.சி.ஐ லம்பார்டு பொதுக் காப்பீட்டுக் கழகம் (**ICICI Lombard General Insurance Company) ஆகிய நிறுவனங்கள் தற்போது இழப்பீட்டுத் தொகையை விவசாயிகளுக்கு தற்போது விவசாயிகளுக்கு வழங்கி வருகிறது.

**அதன் அடிப்படையில், 2016–2017 ஆம் ஆண்டில், வறட்சியால் பயிர் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இதுவரை ரூபாய் 3265 கோடியே 39 லட்சம் இழப்பீட்டுத் தொகை பயிர் காப்பீட்டு நிறுவனங்களால் ஒப்பளிக்கப்பட்டு 10,62,495 விவசாயிகளின் வங்கிக் கணக்குகளில் வரவு வைக்கப்பட்டு வருகிறது.**

வறட்சியால் பாதிக்கப்பட்ட இதர தென்மாநிலங்களுடன் ஒப்பிடுகையில் தமிழ்நாடுதான் மிக அதிகபட்சமான இழப்பீட்டுத் தொகையை விவசாயிகளுக்கு பெற்றுத்தந்து இந்தியாவில் முதலிடம் வகிக்கிறது.

மேலும் தமிழ்நாட்டில் இத்திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்தியதை பாராட்டி **, சர்வதேச பொருளாதார இணைப்புக்கான இந்திய ஆராய்ச்சி கழகம் வெளியிட்ட அறிக்கையில் (எண்.352)** கீழ்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:

**“தமிழ்நாட்டில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பெரும்பாலான விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டது. காப்பீட்டு நிறுவனங்களுக்கு மகசூல் விவரங்கள் மற்றும் காப்பீட்டு கட்டண மானியத்தை வழங்குவதில் தமிழ்நாடு பிற மாநிலங்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்குகிறது”**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி, **காப்பீட்டு நிறுவனங்களால் இன்னும் ஒப்புதல் வழங்கப்படவேண்டிய ரூ.453 கோடி இழப்பீட்டுத் தொகையினை பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு விரைவாக ஒப்புதல் வழங்குவதற்கு காப்பீட்டு நிறுவனங்களை தமிழ்நாடு அரசு தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.** இதில் குறிப்பாக நாகப்பட்டினம் மாவட்டத்திற்கு ரூ.75 கோடியும், தூத்துக்குடி மாவட்டத்திற்கு ரூ.66 கோடியும், தஞ்சாவூர் மாவட்டத்திற்கு ரூ.54 கோடியும், விழுப்புரம் மாவட்டத்திற்கு ரூ.40 கோடியும் இழப்பீட்டுத் தொகை விரைவில் கிடைக்கப்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நடவடிக்கைகள் அனைத்தும் அரசு என்றும் விவசாயிகளுக்கு அரணாக இருக்கிறது என்பதற்கு மேலும் ஒரு எடுத்துக்காட்டாக திகழ்கிறது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**